தமிழகம் முழுவதும் செய்திகள் மற்றும் விளம்பரங்கள் சேகரிக்க நல்ல துடிப்பான செய்தியாளர்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

தொடர்புக்கு:
78100 - 68421,
94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

| மலர்: 01 | இதழ்: 159 | 14-12-2025 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி |
|---|---|---|---|---|---|---|
| Volum 01 | Issue: 159 | 14-12-2025 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy |



புரட்சிக்கவிஞர் பிறந்த மண்ணில் புரட்சிகரமான புதுமைகளைப் படைக்க

நமது மக்கள் சேவகர்

JCM

ஜோஸ் சார்லஸ் மார்டின்

தலைமையில் உதயமாகிறது

LJK

லட்சிய ஜனநாயக கட்சி

பாண்டி மெரினா கடற்கரையில் இன்று (14.12.2025)
காலை 09:00 மணியளவில்
பிரமாண்டமான தொடக்க விழா!
ஏற்றமிகு புதுச்சேரியை உருவாக்க அனைவரும் அணிதிரள்வீர்!

QR-ஐ Scan செய்து JCM அவர்களை பின்தொடருங்கள்

QR-ஐ Scan செய்து LJK-ன் சமூக வலைதள பக்கங்களை பின்தொடருங்கள்

# ரங்கப்பனூர் கிராமத்தில் "என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி" நிகழ்ச்சி நடைபெற்றது.



சங்கராபுரம் டிச 14

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஒன்றியம் ரங்கப்பனூர் கிராமத்தில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த வாக்குச்சாவடி நிகழ்ச்சியில் 8 பாக டிஜிட்டல் முகவர் அருணகிரி வரவேற்பு அளித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக ரிஷிவந்தியம் தொகுதி பொறுப்பாளர் திமுக தலைமை கழக பேச்சாளர் ச.அ.பெருநற்கிள்ளி, சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் அசோக்குமார், மாவட்ட கவுன்சிலர் அஸ்வினி செந்தில்குமார், ஊராட்சி மன்ற தலைவர் R.M.S.K அர்ச்சனா காமராஜன், ஒன்றிய பொருளாளர் நல்லதம்பி மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ரங்கப்பனூர் ஊராட்சி பாகம் 8 இல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி சபதம் ஏற்கப்பற்று தமிழ்நாடு ஒருபோதும் தலை குனியாது முழுக்கத்துடன் கழக ஆட்சியில் ஐந்தாண்டு சாதனைகளையும் நமது சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அவர்களின் வளர்ச்சிப் பணிகளையும் வீதி வீதியாக வீடு வீடாக பரப்புரை செய்யப் பட்டது. இந்த நிகழ்வில் கிளை கழக செயலாளர்கள் பாக முகவர்கள் BLA2 பாக டிஜிட்டல் முகவர்கள் BDA இளைஞர் அணி மகளிர் அணி மற்றும் சார்பணிகள் கழக நிர்வாகிகள் கிளை செயலாளர் இளையப் பிள்ளை செல்வராஜ் வெங்கடேசன் ரங்கநாதன் அன்பழகன் ஏழுமலை வெங்கடேசன் புகழேந்தி மெய்யப்பன் செந்தில் ராஜா ராமசாமி கிளை இளைஞரணி தரணி அஜித்குமார் விஜயகுமார் வினோத் அஜித்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இறுதியில் கிளை செயலாளர் கராத்தே ஏழுமலை நன்றி கூறினார்.

# தமிழக மீனவர்கள் 4 பேர் விடுதலை

ராமேஸ்வரம்: டிச.14–

ராமநாதபுரம் மாவட்டம், நம்புதாளை மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த நவ. 10ம் தேதியன்று, பைபர் படகில் சென்ற பாலமுருகன் (30), தினேஷ் (18), குணசேகரன் (42), ராமு (22) ஆகிய 4 மீனவர்கள், மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது வந்த இலங்கை கடற்படையினர், படகிலிருந்த 4 மீனவர்களை கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, மீனவர்கள் நான்கு பேருக்கும் இலங்கை ரூபாய் மதிப்பில் தலா 10 ஆயிரம் வீதம் 40 ஆயிரம் (இந்திய மதிப்பில் ரூ.11,700) அபராதம் விதித்து உத்தவிட்டார்.

# கூட்டுறவு வங்கி சார்பில் கூட்டுறவு நிதிக்கான காசோலை அளிப்பு.



சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 202425 ஆம் ஆண்டு லாபத்தில் கூட்டுறவுக்கு செலுத்த வேண்டிய கூட்டுறவு ஆராய்ச்சி வளர்ச்சி நிதி ரூ.20.68 லட்சம்,கூட்டுறவு கல்வி நிதி ரூ.13.79 லட்சம் என மொத்தம் ரூ.34.47 லட்சத்துக்கான காசோலையை கூடுதல் பதிவாளர் எம்.குழந்தைவேலு,சேலம் மண்டல இணைப்பதிவாளர் க.ராஜ்குமாரிடம் வழங்கினார். அப்போது,வங்கியின் பொது மேலாளர் வி.சதீஷ்குமார்,முதன்மை வருவாய் அலுவலர் கி.குமார்,சேலம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் நா.பூபதி,ஒன்றிய மேலாளர் ஜ.நந்தகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

# மணப்பாறை அருகே விவசாய நிலத்தில் திடீரென தோன்றிய பத்தடி பள்ளம்.



திருச்சி. டிச. 14–

திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த புத்தாநத்தம் அருகே உள்ள அழக கவுண்டம் பட்டியைச் சேர்ந்தவர் விவசாயி மலையாண்டி மகன் கண்ணுச்சாமி 55. இவர் விவசாய நிலத்தில் தற்போது ரோஜா, நெற் பயிர்கள், சோளத் தட்டை,போன்றவை பயிரிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் திடீரென சோளத்தட்டை மற்றும் நெல் பயிரிடப்பட்டுள்ள இடத்தின் அருகில் திடீரென சிறிய பள்ளம் தோன்றி உள்ளது. சிறிய பள்ளம் என்று விட்டுவிட்டார் இந்த நிலையில் மீண்டும் மறுநாள் காலை சென்று பார்த்த போது சுமார் பத்து அடிக்கும் மேல் பள்ளம் பெரிதாகி கிணறு போல் சென்றுள்ளது .இதை கண்டு விவசாயி அதிர்ச்சி அடைந்தார்.

இச்சம்பவம் பற்றி தகவல் அறிந்த கிராம நிர்வாக அதிகாரி செந்தில்குமார் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விவசாய நிலம் பாறைகள் நிறைந்த கரடு முரடான பகுதி என்றும் திடீரெனத் இப்பகுதியில் பள்ளம் தோன்றியதால்

சுற்றுவட்டார பொதுமக்கள் பள்ளம் ஏற்பட்ட இடத்தை ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

# தமிழக அரசின் "கபீர் புரஸ்கார் விருதுக்கு விண்ணப்பிக்க நாளை கடைசி நாள்

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் டிச 14 :

சமுதாய மற்றும் வகுப்பு நல்லிணக்கத்திற்கான 2026 ஆம் ஆண்டிற்கான "கபீர் புரஸ்கார் விருது" ஒவ்வொரு ஆண்டும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் குடியரசு தினவிழாவின் போது வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து இந்திய குடிமக்களும் (ஆயுதப்படை வீரர்கள், காவல், தீயணைப்புத் துறை மற்றும் அரசுப் பணியாளர்களின் சமுதாய நல்லிணக்க செயல், அவர்கள் ஆற்றும் அரசுப் பணியின் ஒருபகுதியாக நிகழும் பட்சத்தில் நீங்கலாக) இவ்விருதினை பெறத் தகுதியுடையவராவர்.





மேலும் இவ்விருதானது ஒரு சாதி, இனம், வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற சாதி இன வகுப்பைச் சார்ந்தவர்களையோ அல்லது அவர்களது உடைமைகளையோ வகுப்புக் கலவரத்தின் போதோ அல்லது தொடரும் வன்முறையிலோ காப்பாற்றியது வெளிப்படையாகத் தெரிகையில் அவரது உடல் மற்றும் மனவலிமையைப் பாராட்டும் வகையில் வழங்கப்படுகிறது. இவ்விருதானது மூன்று அளவுகளில், தலா ஒரு நபர் வீதம் மூவருக்கு வழங்கப்படுகிறது. முறையே ரூ.20,000, ரூ. 10,000, மற்றும் ரூ.5,000 க்கான காசோலை மற்றும் தகுதியுரை ஆகியவை இதில் அடங்கும்.

2026 ஆம் ஆண்டு, குடியரசு தினத்தன்று வழங்கப்படவுள்ள கபீர் புரஸ்கார் விருதிற்கென தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் / பரிந்துரைகள் இந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட இணையதள முகவரியான http://awards.tn.gov.in த்தில் மட்டுமே 15.12.2025 அன்று அல்லது அதற்கு முன்பாக விண்ணப்பம் செய்து கொள்ளலாம். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

பதக்கம் பெறத் தகுதியுள்ளவர், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு, முதலமைச்சரால் 26.01.2026 குடியரசு தினத்தன்று விருது வழங்கி கௌரவிக்கப்படுவர் .எனவே திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுடையவர்கள் இத்திட்டத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலையில் நடக்கும் திமுக இளைஞரணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்திற்கு முதலமைச்சர் அழைப்பு!

திருவண்ணாமலை:

75 ஆண்டுகளைக் கடந்து தன் அரசியல் பயணத்தை மேற்கொள்ளும் திமுகவுக்கு பக்கபலமாக இருப்பது இளைஞரணி என்று தொண்டர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்று இருக்கிறார். இளைஞரணி நிர்வாகிகளின் சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை திருவண்ணாமலையில் நடக்கும் நிலையில் திமுக இளைஞரணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார். கிராம அளவில் நடைபெறும் அறிவுத் திருவிழா என்றும், திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், எல்லாரையும் கொள்கை அளவில் வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் கூறினார்.


வடக்கு மண்டல திமுக இளைஞரணி நிர்வாகிகள் கூட்டத்தில் 1.30 லட்சம் நிர்வாகிகள் பங்கேற்க உள்ளனர். 50 லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் என்று வலுவான கட்டமைப்பை கொண்டது திமுக இளைஞரணி. திராவிட மாடல் ஆட்சி தொடரும் என்றும், வெற்றிக்கு அடித்தளமாக இளைஞர் அணி மண்டல நிர்வாகிகள் சந்திப்பு அமைக்கப்படும் என்றும் முதல்வர் கூறினார். திருவண்ணாமலையில் நாளை கலைஞர் திடலில் வடக்கு மண்டல இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது. திருவண்ணாமலை இளைஞர் அணி வடக்கு மண்டல சந்திப்புக்கு வருமாறு தொண்டர்களுக்கு முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். 1980ல் ஸ்டாலினால் தொடங்கப்பட்ட இளைஞர் அணி திமுகவுக்கு வலிமை சேர்த்து காலத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

# தென்காசியில் அரசு வக்கீலை கொன்ற லாரி உரிமையாளர் ரயிலில் பாய்ந்து தற்கொலை

தென்காசி: செங்கோட்டை நீதிமன்ற அரசு வழக்கறிஞர் முத்துக்குமாரசாமி கடந்த 3ம் தேதி தென்காசி கூலக்கடை பஜாரில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்து வெட்டி கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக வழக்கறிஞரின் சொந்த ஊரான ஊர் மேலழகியானைச் சேர்ந்த லாரி உரிமையாளரான சிவசுப்பிரமணியன் என்பவரை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். அவரது மனைவி ராஜேஸ்வரி, மைத்துனர் சதீஷ் ஆகியோரை ஏற்கனவே போலீசார் கைது செய்தனர். தலைமறைவாக இருந்த சிவசுப்பிரமணியனை தனிப்படை போலீசார் கேரளா உள்ளிட்ட பல பகுதியில் தொடர்ந்து 8 நாட்களாக தேடி வந்தனர். இந்நிலையில் நாமக்கல் அருகே ரயிலில் பாய்ந்து ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவர் தென்காசி போலீசாரால் தேடப்பட்டு வந்த சிவசுப்பிரமணியனின் உருவத்துடன் ஒத்துப்போவதாக தகவல் கிடைத்தது. அதன்பேரில் தென்காசி இன்ஸ்பெக்டர் ராபர்ட் ஜெயின் நேற்று முன்தினம் சிவசுப்பிரமணியன் உறவினர்களை அழைத்துச் சென்று உடலை பார்வையிட்டார். இதில் இறந்தது சிவசுப்பிரமணியன் தான் என்பதும், இதுதொடர்பாக சேலம் ரயில்வே போலீசார் கடந்த 4ம் தேதியே வழக்குப்பதிவு செய்துள்ளதும் தெரியவந்தது. அதாவது கடந்த 3ம் தேதி வழக்கறிஞர் முத்துக்குமாரசாமியை கொலை செய்த மறுநாளே சிவசுப்பிரமணியன் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

# ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவரை நேரில் சென்று சந்தித்த அமைச்சர் ஜான்குமார்.!!!.

## புதுவை அரசியல் குறித்து வெங்கட்ராமனுடன் முக்கிய ஆலோசனை.



புதுச்சேரி, டிச. 14–

புதுச்சேரி அமைச்சர் ஜான்குமார் அவர்களின் சந்திப்பு குறித்து புதுச்சேரி மாநில மக்கள் முன்னேற்றக் கழக மாநில தலைவர் R.L. வெங்கட்ராமன் அறிக்கை:

புதுச்சேரி அமைச்சர் ஜான்குமார் அவர்கள் நேரில் எனது இல்லத்திற்கு வந்து,எனது தலைமையில் புதிய கட்சி ஆரம்பித்ததை பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தார். புதுச்சேரி அரசியலில் மூத்த அரசியல் வாதியாக இருப்பதால் மரியாதை நிமித்தமாக என்னை சந்தித்தார்.

மேலும் அவருக்கு மேதகு துணை நிலை ஆளுநர் அவர்கள் அமைச்சராக பதவி பிரமாணம் செய்து வைத்து 147 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் முதல்வர் ரங்கசாமி அவர்கள் அமைச்சர் ஜான்குமார் அவர்களுக்கு இன்னும் இலாகா ஒதுக்கவில்லை. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இது போன்று இலாகா அமைச்சர்கள் இல்லை. இது சம்பந்தமாக இரண்டுமுறை கட்சியின் சார்பாகவும், புதுவை மாநிலத்தின் மக்கள் சார்பாகவும் ஜனநாயக ரீதியில் நான் அறிக்கை வெளியிட்டு குரல் கொடுத்தும், முதல்வர் ரங்கசாமி அவர்கள் எந்த வொரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் கடைசியாக கடந்த வாரம் போலி மருந்து தொழிற்சாலை சம்பந்தமாக சிபிஐ விசாரணை கோரி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணை நிலை ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து வலியுறுத்திய போது அமைச்சர் ஜான்குமார் அவர்களுக்கு உடனடியாக இலாகா ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். அது சம்பந்தமாக பேட்டியும் கொடுத்திருந்தேன். அதற்கு அமைச்சர் ஜான்குமார் அவர்கள் என்னை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து கொண்டார்.

புதுச்சேரி இன்றைய அரசியல் நிலவரம் குறித்து ஆலோசனை :

மேலும் புதுச்சேரியில் இன்றைய அரசியல் நிலவரம் குறித்தும் ஆலோசன செய்தோம். எதிர் கால அரசியல் நிலையில் எடுக்க வேண்டிய நிலை குறித்தும் கலந்து ஆலோசித்தோம்.

விரைவில் புதுவையில் ஒரு நல்ல அரசியல் மாற்றம் விரைவில் வரும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து ஆலோசனைக் கூட்டம் சிறப்பு வாக்காளர் பட்டியல் மேற்பார்வையாளர் (வடக்கு மண்டலம்) ராமன்குமார், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பொறியாளர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல்நிலை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஹென்றி பீட்டர், வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் நிலை சரிபார்ப்பு பணியின் மேற்பார்வையாளர் சரவணன், தேர்தல் வட்டாட்சியர் சக்திவேல் முருகன், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் பொறியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கபபட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாசகர் வட்ட கூட்டத்தில் நல்நூலகர் விருது பெற்றவருக்கு பாராட்டு..!



வந்தவாசி, டிச 14:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சி.ம. புதூர் கிளை நூலக வாசகர் வட்டம் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வாசகர் வட்ட தலைவர் பொன். சந்திரசேகரன் தலைமை தாங்கினார். நூலகப் புரவலர்கள் மீராசா, குலாப்ஜான் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நல்நூலகர் ஜா.தமீம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, வருவாய்த்துறை மா.சுந்தரமூர்த்தி பங்கேற்று, இன்றைய இளைய தலைமுறை வாசிப்பு எனும் நூலகத்தை நோக்கி செல்ல வேண்டும் என்றும், நான் வாசிக்க நூலகத்தை நோக்கி சென்றதால் தான் உலக சாதனையாளராக என்னால் உருவாக முடிந்தது எனக் கூறினார். மேலும் நிகழ்வில் "டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது" பெற்ற நல்நூலகர் ஜா.தமீம் அவர்களுக்கு நிகழ்வில் சிறப்பிக்கப்பட்டது. நிகழ்வில் ஆசிரியை த.பாரதி, ஒய்வு சத்துணவு அமைப்பாளர் தனஞ்செயன், நாளிதழ் முகவர் கோடீஸ்வரன் உள்ளிட்ட பள்ளி மாணவர்கள் மற்றும் வாசகர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் ஆசிரியை தங்கம் நன்றி கூறினார்.



தமிழக முதல்வர், தமிழக துணை முதலமைச்சர் முன்னிலையில் சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் துறைதோறும் சாதனைகள் படைத்து, வெல்லும் தமிழ் பெண்களைச் சிறப்பிக்கும் மாபெரும் விழா மற்றும் இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர உரிமைத் திட்ட விரிவாக்க விழாவில் மகளிர் உரிமைத் தொகை வங்கி பற்றும் அட்டைகளை வழங்கி சிறப்பித்ததைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற விழா நிகழ்வில் அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஆகியோர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவ்ட ஆட்சித்தலைவர் சரவணன், மாநகராட்சிமேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், தியாகராஜன், பழனியாண்டி, மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி, அரசு அலுவலர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூரில் 1482 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமை தொகைக்கான வங்கி பற்று அட்டைகள் : அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்




திருவள்ளூர் டிச 14 : "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" தமிழ் நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண் டாட்டம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2 ஆம் கட்ட விரிவாக்கம் தொடக்க விழா தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2 ஆம் கட்ட விரி வாக்கத்தை தொடங்கி வைத்தார். இதனை திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம், டி.ஆர்.பி.சி.சி இந்து கல்லூரியிலுள்ள கூட்டரங்கில் காணொளி காட்சி வாயிலாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் பார்வை யிட்டு 1482 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டை களை வழங்கி பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 உரிமை தொகை வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் குடும்ப அட்டைதரார்கள் 2.16 கோடி ஆகும். தகுதியின் அடிப்படையில் 1.13 கோடி மனுதரார்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யபட்ட வர்களுக்கு 30,838 கோடி வழங்கப்பட்டது. இதுவரை அரசின் சார்பில் ரூ.26000 மாதம்மாதம் ஒவ்வொரும் உரிமை தொகையை பெற்றிருக்கின்றார்கள். இரண்டாம் கட்டமாக 17 லட்சம் மகளிர்களுக்கு இன்று வழங்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக 3,49,499 பயனாளிகள் இதுவரை உரிமை தொகை பெற்றிருந்தார்கள். இரண்டாம் கட்டமாக 70,450 புதிய பயனாளிகள் இதன் மூலம் பயனடை வார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 389 முகாம்கள் வாயிலாக 4 கட்டமாக பெறப்பட்ட மனுக்களில் சிறப்பு திட்ட செயலாக்க துறை சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது என அமைச்சர் கூறினார்.

இதில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சட்டமன்றஉறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் (திருவள்ளூர்), எஸ்.சந்திரன் (திருத்தணி), துரை சந்திரசேகர் (பொன்னேரி), ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா,மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், திருவள்ளூர் வருவாய்கோட்டாட்சியர் ரவிச்சந்திரன்,தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பாலமுருகன், உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடியில் நடிகர் ரஜினிகாந்தின் 75 வது பிறந்தநாள் விழா மனநல காப்பகத்தில் இனிப்பு மற்றும் விருந்து வழங்கி கொண்டாட்டம்



பரமக்குடி: டிச.14–

நடிகர் ரஜினிகாந்தின் 75வது பிறந்த நாளை முன்னிட்டு பரமக்குடி நகர் தலைமை ரஜினிகாந்த் ரசிகர் மன்றத்தின் சார்பில் கேக் வெட்டி, இனிப்பு வழங்கி கொண்டாடப் பட்டது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக் குடியில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 75 வது பிறந்த நாளை முன்னிட்டு பரமக்குடி நகர் தலைமை ரசிகர் மன்றத்தின் சார்பில் பரமக்குடி காவ்யா கல்வி மையம் மற்றும் சௌராஷ்ட்ரா நர்சரி, பிரைமரி பள்ளியில் குழந்தை களுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து பரமக்குடி அருள் சான்று நிலை யத்தில் உள்ள குழந்தை களுடன் கேக் வெட்டி, இனிப்புகள் வழங்கி, அசைவ விருந்து வழங்கி சிறப்பாக கொண்டாடப் பட்டது. இந்நிகழ்ச்சிக்கு பரமக்குடி நகர் தலைவர் நாகா (எ) நாகநாதன் தலைமை தாங்கினார். நகர் இணைச் செயலாளர்கள் எஸ்.என். நாகநாதன், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர் துணைச் செயலாளர் சுதாகர் வர வேற்றார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறுப்பாளர் பிரபு, இராமநாதபுரம் நகர் தலைவர் சுரேஷ் மேத்தா, நகர் துணைத் தலைவர் பாபா முருகன் ஆகியோர் சிறப்பு அழைப் பாளர்களாக கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சியில் செயற் குழு உறுப் பினர்கள் ரஞ்சித் குமார், இராஜேஸ், ராம்குமார், ரஜினி குமார், அசோக் மேத்தா, நாகாஅர்சுன், செல்லக்கிளி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது



அரியலூர் அண்ணா சிலை அருகில் ஜாக்டோ ஜியோ அமைப்பின் சார்பில் பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளர். போராட்டத்தில் தேர்தல் வாக்குறுதியில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவித்த திட்டங்களை செயல்படுத்திட வேண்டும். புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்திட வேண்டும். சத்துணவு அமைப்பாளர்கள் அங்கன்வாடி ஊழியர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் அனைவருக்கும் காலமுறை ஊதிய வழங்க வேண்டும் ஆசிரியர்களுக்கு இடையே உள்ள ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் போராட்டத்தில் பல்வேறு துறை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்



அரியலூர் மாவட்டத்தில் தேர்தல் ஆணைய உத்தரவுப்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல்நிலை சரிபார்ப்பு பணி நடைபெற்று வருவதை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி நேரில் பார்வையிட்டார்.



அமைச்சர் இரா. இராஜேந்திரன் தமிழ்நாடு வேளாணமை பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின்பொன்விழா ஆண்டு நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் துணை வேந்தர் (பொ) முனைவர் இர.தமிழ்வேந்தன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளட்ட தொட்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# சேலம் பேக்கரியில் சிதறிய ரத்தம்.

# சினிமா பாணியில் நடந்த அரிவாள் வெட்டு.

## இந்த பிரச்சனைக்கு இவ்ளோ பெரிய சண்டையா?



சேலம். டிச. 14–

சேலம் மாவட்டம் எடப்பாடி நகராட்சிக் குட்பட்ட பேருந்து நிலையம் எதிரே உள்ள"காபி டைம் ஸ்வீட்ஸ்"என்ற பெயரில் செயல்பட்டு வரும் தனியார் பேக்கரி முன்பு தாவாந்தெரு பகுதியைச் சேர்ந்த கார் ஓட்டுநர் நந்தகுமாரும் ஆலச்சம்பாளையம் பகுதியைச் சேர்ந்த தனியார் பைனான்ஸ் கலெக்சன் ஏஜண்டாக பணிபுரிந்து வரும் மாணிக்கம் ஆகிய இருவரின் இருசக்கர வாகனங்களும் லேசாக மோதியதாக சொல்லப்படுகிறது.

இதனால் இருவருக் கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது. முதலில் இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு பின்னர் கைகலப்பு ஏற்பட்டது.

இதில் ஆத்திர மடைந்த முதலில் மாணிக்கம் மற்றும் அவரது நண்பர்கள் முதலில் நந்தகுமாரை தாக்கியதாக சொல்லப் படும் நிலையில் பதிலுக்கு நந்தகுமார் மாணிக்கத்தை தாக்கிய போது இருவருக்கும் இடையே கடும் தகராறு ஏற்பட்டு நண்பர்களோடு பேக்கரிக்குள் புகுந்த மாணிக்கத்தை விடாமல் பின் தொடர்ந்து சென்ற நந்தகுமார் கையில் மறைத்துவைத்திருந்த அரிவாளால் சரமாரியாக வெட்டியுள்ளார். இதனால் படுகாய மடைந்த மாணிக்கம் மீண்டும் நந்தகுமார் வைத்திருந்த அரிவாளை பறித்து அவரை கடுமை யாக வெட்டியிருக்கிறார்.

இதனை பார்த்த பேக்கரியில் இருந்த மற்ற நபர்கள் காவல் துறையினருக்கு தெரிவித்த நிலையில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல்துறையினர் இருவரையும் கண்டித்து அவர்களிடமிருந்து அரிவாளை கைப் பற்றினர். பின்னர் படுகாயமடைந்த இருவரையும் மீட்டு எடப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். அங்குள்ள மருத்துவர்கள் மூலம் மாணிக்கம் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்.

மேலும் சினிமாவை போல இருவரின் மோதல் அரிவாள் வெட்டு குறித் தான அதிர்ச்சியூட்டும் சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து இச்சம்பவம் குறித்து எடப்பாடி போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வண்டி உரசிய சண்டைக்கு இருவரும் மாறி மாறி அரிவாளால் வெட்டிக் கொண்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

# திருவள்ளூர் அருகே சட்டக் கல்லூரியில் மாணவியின் வகுப்பை கல்லூரி நிர்வாகம் மாற்றியதால் மாணவி தூக்கிட்டு தற்கொலை :

திருவள்ளூர் டிச 14 :

திருவள்ளூர் அடுத்த கீழ்நல்லாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சங்கர் என்பவரின் மகள் பாரதி. இவர் காஞ் சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் உள்ள டிஎம்ஐ ஜோசப் என்ற தனியார் சட்டக் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயின்று வந்துள்ளார். இந்த நிலையில் நான்காம் ஆண்டு பயின்ற மாணவி பாரதி பி பிரிவில் பயின்று வந்த நிலையில் திடீரென கல்லூரி நிர்வாகம் பாரதியை ஏ பிரிவிற்கு மாற்றியுள்ளது,பி பிரிவில் பயின்று வந்த மாணவிக்கு வகுப்பில் நண்பர்கள் பலர் இருந்த நிலையில் ஏ பிரிவிற்கு மாறுவதற்கு மாணவி பாரதி மறுத்து தனது பெற்றோரை கல்லூரிக்கு அழைத்துச் சென்று பிரிவை மாற்ற வேண்டாம் எனக் கேட்டுள்ளார்.

ஆனால் கல்லூரி நிர்வாகம் வகுப்பை மாற்ற மறுத்ததால் மகளுக்கு டீசி வழங்குமாறு கேட்டுள்ளனர். ஆனால் டிசி வேண்டுமென்றால் 3 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலுத்தினால் மட்டுமே டி சி கொடுக்கப்படும் என கல்லூரி நிர்வாகம் கட்டாயப்படுத்தியதாக கூறப்படுகிறது.இதனால் தான் பயின்ற பழைய வகுப்பில் இருந்த நண்பர்களை பார்க்க முடியாது வேறு கல்லூரிக்கும் சென்று சேர்வதற்கு பணம் இல்லாததால் மனமுடைந்த மாணவி தனது வீட்டில் அறையில் திடீரென தூக்கிட்டு கொண்டதை கண்ட பெற்றோர்கள் அவரை மீட்டு திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்த நிலையில் பாரதியை பரிசோதனை செய்த மருத்துவர்கள் பாரதி ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதனால் மனமடைந்த பாரதியின் தாய் கதறி அழுதபடி சாலையில் படுத்து உருண்டு அழுத காட்சி காண்போரின் கண்களில் கண்ணீரை வரவழைப்பதாக இருந்தது, மேலும் தனது மகள் உயிரிழப்பிற்கு கல்லூரி நிர்வாகமே பொறுப்பு என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தாய் கண்ணீருடன் கோரிக்கை வைத்தார். இதுகுறித்து மணவாள நகர் காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர்கள் சங்கத்தின் வட்ட செயற்குழ கூட்டம் நடைபெற்றது.




தஞ்சாவூர்..நவ 14

பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு வருவாய் கிராம உதவியாளர்கள் நல சங்கத்தின் வட்ட அளவிலான சிறப்பு கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் சிறப்பு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

வட்ட தலைவர் கஜேந்திரன் தலைமை தாங்கினார். வட்ட செயலாளர். ம.செபஸ்டின். சிறப்புரை ஆற்றினார். மாநில பொருளாளர் வெங்கடாஜலபதி. மாநில செயற்குழு உறுப்பினர் பக்ரிசாமி மாவட்ட செயற்குழு உறுப்பினர்.ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்ட பொறுப்பாளர்கள் சத்யராஜ். ஜவஹர் பாபு. பாப்பாத்தி. அம்பிகா. சரகதலைவர்கள். செல்வம். சேக் தாவுத். சின்னதம்பி. ரமேஷ். முன்னணி தோழர். அன்பழகன். ராமமூர்த்தி. கூத்தபெருமாள். அகஸ்டின் தினேஷ். ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

வருகிற 18ஆம் தேதி சென்னையில் நடைபெறுகின்ற பேரணியில் அனைத்து ஊழியர்களும் கலந்து கொள்வது என்னவும் கிராம உதவியாளர்களுக்கு அலுவலக உதவியாளர்களுக்கு இணையான காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், கிராம உதவியாளர் களுக்கு கல்வி தகுதி மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட வேண்டும், கிராம உதவியாளர்களுக்கு பதவி உயர்வை 10 ஆண்டுகளில் இருந்து ஆறு ஆண்டுகளாக குறைக்க வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியின் நிறைவில் வட்ட பொருளாளர் செந்தில்குமார் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.




## லட்சிய ஜனநாயக கட்சி தொடக்க விழா

# சார்லஸ் மார்ட்டின் கொடியை அறிமுகப்படுத்துகிறார். பாண்டி மெரினாவில் இன்று நடைபெறுகிறது.




புதுச்சேரி டிச 14:

தொழிலதிபரும் சமூக சேவகருமான சார்லஸ் மார்ட்டின் புதுச்சேரியில் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றார், கடந்த ஓராண்டுக்கு மேலாகவே தங்கள் நிறுவனமான மார்ட்டின் மற்றும் சார்லஸ் குரூப்ஸ் சார்பில் புதுச்சேரி மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றார், புதுச்சேரியில் ஏஞ்சல் புயல் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.5 கோடி அளவில் நிவாரண பொருட்களை வழங்கி உதவி கரம் நீட்டினார்.

தேசியக்கொடி பேரணி : பாகிஸ்தான் தீவிரவாத தாக்குதலுக்கு எதிராக இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் வெற்றி கொண்டாடும் வகையில் சார்லஸ் மாட்டின் அவரது தாயார் லீமா ரோஸ் ஆகியோர் சுமார் 5 ஆயிரம் பேருடன் பங்கேற்ற பிரம்மாண்ட தேசியக்கொடி பேரணி புதுச்சேரி மக்கள் மத்தியில் இடம் பிடித்தது.

ஜே சி எம் மக்கள் மன்றம் சார்பில் புதுச்சேரியில் பல்வேறு தொகுதிகளில் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டு வரும் சார்லஸ் மாட்டின் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு உதவிகளையும் செய்து வருகிறார்.

முதியவர்கள் மாற்றுத் திறனாளிகள் ஏழை எளிய மாணவர்கள் நிதி உதவிகளையும் சுகாதாரம் அற்ற குடிநீரால் உயிரிழந்தவர்களுக்கு நிதி உதவி செய்துள்ளார். ஜே சி எம் மக்கள் மன்றம் சார்பில் மழைக்காலத்திற்கு முன்னர் பல்வேறு வாய்க்கால் களில் இருந்த பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றப்பட்டு மழைக்காலத்தில் தண்ணீர் தேங்காமல் இருக்க வகையில் உதவி செய்தார்.

அன்னதானம் : காமராஜர் நகர் தொகுதி முதலியார் பேட்டை பாகூர் திருபுவனை நெல்லி தோப்பு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு சார்லஸ் மார்ட்டின் அன்னதானம் வழங்கி வருகின்றார்.

அவ்வப்போது புதுச்சேரியில் நடக்கும் பொதுமக்கள் பிரச்சனை தொடர்பாகவும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் போராட்டம் பேரணி ஆகியவற்றை நடத்தி வருகின்றார்.

தொடக்க விழா : அரசின் குறைகளை சுட்டிக்காட்டி பேசி வருகிறார் ஜேசிஎம் மக்கள் மன்றம் மூலம் மக்கள் நலத்திட்ட பணிகளை செய்து வரும் சார்லஸ் மார்ட்டின் தேர்தலை சந்திக்கும் வகையில் புதிய கட்சியை டிசம்பர் 14ஆம் தேதி தொடங்குகின்றார். முன்னதாக ஐநா சபையில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் தன்னை லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் என அறிமுகப்படுத்தினார் அப்பொழுது தனது கட்சியின் பெயரை அவர் ஐநாவில் அறிவித்துவிட்டார்.

கொடி அறிமுகம் : இந்நிலையில் பாண்டி மெரினா கடற்கரையில் நடக்கும் பிரம்மாண்ட கட்சி தொடக்க விழா மற்றும் கொடி அறிமுக விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார். முன்னதாக 160 மீன்பிடி படகுகளில் கடலுக்குள் சென்று எல். ஜேகே என்ற வடிவத்தோடு படகை நிறுத்தி நடுவில் பெரிய விசைப்படகில் லட்சிய ஜனநாயக கட்சியின் கொடியை அறிமுகப்படுத்தி கொடியை ஏற்றி வைக்கின்றார்.

இந்த நிகழ்ச்சிக்காக சார்லஸ் மார்ட்டின் வழிகாட்டுதலின்படி ஜேசிஎம் மக்கள் மன்றத்தினர் பிரம்மாண்ட ஏற்பாட்டினை செய்து வருகின்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்கும் சார்லஸ் மாற்றினை தமிழர்களின் கலாச்சார கலைகளான மயிலாட்டம் ஒயிலாட்டம் தப்பாட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகள் ஓடு அவரை வரவேற்கின்றனர்.

மூன்று நிறமான கொடி : லட்சிய ஜனநாயக கட்சியின் கொடி ஊதா வெள்ளை சிகப்பு நிறத்தில் வடிவமைக்கப்பட்டு அதில் சிங்கமுகம் மற்றும் நட்சத்திரங்கள் போன்ற வடிவமைப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது இந்த கொடியை டிசம்பர் 14 சார்லஸ் மாட்டின் ஏற்றி வைக்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் சார்பில் கோவையில் தேசிய அளவிலான சி.ஏ. மாணவர்கள் மாநாடு துவக்கம்; 1000த்துக்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்பு!

## மத்திய அரசு, இந்திய பட்டயக் கணக்காளர்களை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டயக் கணக்காளர்களாக முன்னேற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது சி.ஏ. ஜி. ராமசுவாமி தகவல்




கோயம்புத்தூர், டிசம்பர்,14

சி.ஏ. மாணவர்கள் என்றழைக்கப்படும் பட்டயக் கணக்காளர் மாணவர்களுக்கான தேசிய அளவிலான மாநாட்டை இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம்( ஐ.சி.ஏ.ஐ)கோவையில் 2 நாட்கள் நடத்துகின்றது.

'அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவு' ஆகியவற்றை கருப்பொருளாக கொண்டு 'விதை' (Vidh.Ai) எனும் தலைப்பில் இந்த மாநாடு கோவை அவிநாசி சாலையில் உள்ள பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறுகிறது.

இதில் பசுமை மற்றும் நீர்மேலாண்மை அமைப்பான சிறுதுளியின் நிர்வாக அறங் காவலரும், பிரபல பிரிக்கால் நிறுவனத்தின் தலைவருமான வனிதா மோகன் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சி.ஏ.ஜி. ராமசுவாமி, கௌரவ விருந்தினராக பங்கேற்று அவருடன் சேர்ந்து இந்த மாநாட்டை தொடங்கி வைத்தார்.

இவர்களுடன் மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் சி.ஏ.ஆர். சதீஷ்; சிகாசாஅமைப்பின் தலைவர் சி.ஏ. கே. முத்து குமார்; செயலாளர் சி.ஏ. தங்கவேல்; மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் துணைத் தலைவர் சி.ஏ.சூர்வாஜித் எஸ். கிருஷ்ணன் மற்றும் பலரும் துவக்க விழாவில் பங்கேற்றனர்.

இந்த இரண்டு நாள் தேசிய மாநாட்டில் 1300 சி.ஏ. மாணவர்கள் பங்கேற்கின்றனர். இந்த நிகழ்வில் பல தொழில்நுட்ப அமர்வுகள், ஊக்கமூட்டும் அமர்வுகள், கலாச்சார நிகழ்வுகள், சிறப்பு அமர்வுகள் மற்றும் நிறைவு விழா ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இந்த மாநாட்டின் துவக்க விழாவின் போது, இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சி.ஏ.ஜி. ராமசுவாமி அவர்கள் பேசுகையில், இந்தியாவில் இன்று 4.25 லட்சம் பட்டயக் கணக்காளர்கள் உள்ளனர் என்றும், மேலும் 10 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் சி.ஏ.படித்து வரு கின்றனர் என்றும் தெரிவித்தார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு கணக்கியல் தொழில் முக்கியமானது என்றும், சி.ஏ. படிக்கும் மாணவர்களுக்கு முன் பெரிய பொறுப்புகளும், மிக பெரிய வாய்ப்புகளும் காத்திருக் கின்றன என்றும் அவர் தெரி வித்தார். "உங்கள் வாய்ப்புகள் இந்தியாவில் மட்டுமே உள்ளது என்று நீங்கள் நினைக்க வேண்டாம். உங்கள் வாய்ப்புகள் பறந்துவிரிந்து உள்ளது," என்று அவர் மாணவர்களிடம் கூறினார்.

இந்திய பட்டயக் கணக்காளர்களை உலகளாவிய பட்டயக் கணக்காளர்களாக மாற்றுவதற்கு இந்த அமைப்பு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக கூறிய அவர், வெளிநாடுகளில் அதிக எண்ணிக்கையிலான தலைமை நிதி அதிகாரிகள் இந்தியாவை சேர்ந்தவர்களாக உள்ளனர் என கூறினார். சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, துபாய் ஆகிய நாடுகளிலும் உள்ள அதிக எண்ணிக்கையிலான பட்டயக் கணக்காளர்கள் இந்தியாவை சேர்ந்தவர்கள் என அவர் கூறினார்.

இந்திய அரசு, குறிப்பாக நமது பிரதமர் நரேந்திர மோடி, நமது பட்டயக்கணக்காளர்களை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டயக் கணக்காளர்களாக மாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என அவர் கூறினார்.

ஒருவர் நமது நாட்டில் சி.ஏ. பணியை முடிக்கும்போது, இங்கிலாந்து, வேல்ஸ், ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் (மற்றும் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ள பிற நாடுகள்) ஆகிய நாடுகளில் வெறும் 1 தேர்வை முடிப்பதன் மூலம் அங்கு சி.ஏ.வாக செயல்பட முடியும் என மாணவர்களுக்கு அவர் விளக்கினார்.

சிறப்பு விருந்தினர் வனிதா மோகன் பேசுகையில், நிறுவனங்கள் என்பது பல கட்டத்தில் நிதியைச் சுற்றியே இயங்குகின்றன என்றும், நிதி அமைப்பில் ஒரு சி.ஏ.வின் பங்கு மிக முக்கியமானது என்றும் கூறினார்.

சி.ஏ. என்பவர் ஒரு நிறுவனத்தின் சுமுகமான செயல்பாட்டுக்கு அவசியமான ஒரு பணியாளர் என கூறிய அவர்,

இன்று சி.ஏ. பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் நிறுவனங்களுக்குள் அடியெடுத்து வைக்கும்போது, நிறுவனத்தின் அனைத்து நிர்வாக பணியாளர்களை இணைத்து அவர்களைத் தன்னுடன் எடுத்துச் செல்ல நினைவில் கொள்ளுமாறு அறிவுறுத்தினார், ஏனெனில் இந்த செயல், நிறுவனத்திற்கு அவர்களால் மிக பயனுள்ள முடிவுகளை கொடுத்து உதவும் என கூறினார்.

நிகழ்ச்சியின் நிறைவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது, செயற்கை நுண்ணறிவு (A.I.) பட்டயக் கணக்காளர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்று சி.ஏ. ஜி. ராமசுவாமியிடம் கேட்கப் பட்டது. செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தக் கற்றுக் கொள்பவர்கள், படிப்பதிலும், பல்வேறு ஆவணங்களைச் சரிபார்ப்பதிலும் அதை ஒரு பயனுள்ள கருவியாக பார்ப்பார்கள் என்று கூறினார்.

செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு சிறந்த கருவியாக இருக்குமே தவிர அது நம் மனித திறன்களை ஒருபோதும் மாற்றிட முடியாது என்றும் அவர் கூறினார்.

# ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு அரசு நிகழ்ச்சிகள்...

## அமைச்சர் சு. முத்துசாமி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கினார்...





ஈரோடு. நவ. 14

ஈரோடு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், துறை சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றது.

இதில் ஈரோடு மாவட்டம் லக்காபுரம் அரசு மேல்நிலை பள்ளி மற்றும் மொடக்குறிச்சி அரசு மகளிர் மேல்நிலை பள்ளியில் தமிழக அரசால் வழங்கப்படும்விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி களில் கலந்து கொண்ட அமைச்சர் சு. முத்துசாமி 17 .56 லட்சம் மதிப்பீட்டில் அந்தப் பள்ளிகளின் பயின்று வரும் 364மாணவமாணவிகளுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் இலவச மிதிவண்டிகளை வழங்கினார்.

மேலும் லக்காபுரம் மற்றும் மொடக்குறிச்சி அரசு மேல்நிலை பள்ளிகளில் நடைபெற்று வரும் பள்ளியின் கட்டிடப் பணிகளையும் அமைச்சர் முத்துசாமி ஆய்வு செய்தார்.

தொடர்ந்து தமிழக அரசால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நல திட்ஷடங்கள் மற்றும் பல்வேறு உதவிகள் குறித்துமாணவமாணவிகள் மத்தியில் பேசினார். இதனைத் தொடர்ந்து சிவகிரி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பவள விழாவில் கலந்து கொண்டார். பள்ளி துவங்கப்பட்டு 75 ஆண்டுகள் ஆகும் நிலையில் அங்கு பவள விழா கொண்டாடப் பட்டது. சிவரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பவள விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் முத்துசாமி, கீழ்நிலை நீர் தேக்கதொட்டி,சமையலறை, புதிய வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் பவள விழா நினைவு வளைவு ஆகியவற்றை திறந்து வைத்து பேசினார்.

மேலும்இந்தநிகழ்ச்சியில் சிவகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பாக பணியாற்றி வரும், தலைமை ஆசிரியர், ஆசிரியர் பெருமக்கள் மற்றும் பள்ளியின் அலுவலர்கள் ஆகியோரை பாராட்டி நினைவு பரிசுகள் வழங்கினார். மேலும் பவள விழா மலரையும் அவர் வெளியிட்டார்

தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி 53வது வார்டு பகுதியை சேர்ந்த, ரயில்வே குடியிருப்பு, நலன் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் கலந்து கொண்டு முகாமிற்கு வந்திருந்த பொது மக்களிடம் நலம் விசாரித்து, மருத்துவம் சார்ந்த பல்வேறு நல திட்டங்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சி சந்திரகுமார், மேற்கு மண்டல காவல்துறை தலைவர் டாக்டர் செந்தில்குமார், மொடக்குறிச்சி வட்டாட்சியர் சிவசங்கரன், மொடக்குறிச்சி பேரூராட்சி தலைவர் செலவாம்பாள் சரவணன், சிவகிரி பேரூராட்சி தலைவர் பிரதீபா கோபிநாத் உள்பட உள்பட அரசு சார்ந்த அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421